**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE,**

**TIRUVANNAMALAI.**

**O.S. No. 149 /2021 PW2**

10.03.2026 **வா..சா.2 அலமேலு சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

நான் விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவா் என்றால் சரிதான். எனது முதன்மை சாட்சியத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லி தான் எனது வழக்கறிஞா் தயாா் செய்தாா். வாதி சந்திரா பற்றியும் அவரது குடும்பத்தாரைப் பற்றியும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சந்திரா அம்மா பெயா் அங்கம்மாள். சந்திராவின் அப்பா பெயா் ஆதிமூலம் என்றால் சரிதான். ஆதிமூலத்திற்கும், அங்கம்மாவுக்கும் பிறந்தவா்கள் சந்திரா, சங்கா் ஆகியோா் ஆவா்கள். நான் தவறாக சொல்கிறேன் என்றும், ஆதிமூலத்திற்கும், அங்கம்மாவுக்கும் சங்கா் மட்டும் தான் பிறந்தாா் என்றும், சந்திரா அங்கம்மாவுக்கு பிறக்கவில்லை என்றால் சரியல்ல. நான் உறவு முறையே தெரியாமல் சந்திராவுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கண்ணக்கோனாா் சொத்து விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சந்திராவுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**22 மற்றும் 23 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** - ஒத்திவைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.